## அண்ணாவிலப்பன் (வேங்கடாசார்யர்)

## வாழி திருநாமம்

திரு மாசி கேட்டை நாள் அவதரித்தோன் வாழியே
செந்தமிழும் வடகலையும் திகழ்ந்துரைப்போன் வாழியே
திருக்கச்சி மாநகரம் செழிக்க வந்தோன் வாழியே
சீராரும் எட்டெழுத்தைத் தொகுத்துரைப்போன் வாழியே
பரிவுடனே அண்ணாவின் பதம் பணிந்தோன் வாழியே
பார் உலகில் அடியவர்க்குப் பதம் அளிப்போன் வாழியே
திருவுடைய எதிராசர் செல்வம் முற்றும் வாழியே
சேர்ந்த புகழ் அண்ணாவிலப்பன் அடி இணைகள் வாழியே

---